Register No. | | | | | | | |

**TA1A**

5877-23

(For the candidates admitted from 2017-2018 onwards)

**LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS,**
**NOVEMBER 2023.**

(Three-year Regular Course)

First Year – First Semester

**ENGLISH**

Time : $2\frac{1}{2}$ hours                Maximum : 70 marks

**PART A** — ($1 \times 10 = 10$ marks)

1. Answer ONE of the following in about 300 words :

   (a) Describe the best methods of study as enunciated by Glanville Williams.

   (b) Explain the various divisions of law with examples.

**PART B** — ($1 \times 10 = 10$ marks)

2. Answer ONE of the following in about 300 words :

   (a) Explain the Welsh Students case and Lord Dennings remarks in the appellate court.

   (b) Discuss the reasons and outcome of the dockers strike.

**PART C** — (20 marks)

3. Answer ONE of the following in about 300 words. ($1 \times 10 = 10$)

   (a) Right to speech.

   (b) Artificial Intelligence.

   (c) "Parks are lungs of cities" — Give your views.

4. Answer ONE of the following in about 300 words. ($1 \times 10 = 10$)

   (a) Define logic. Compare it with other social sciences.

   (b) Explain syllogism and its rules.

## PART D — (30 marks)

5. Identify the vowels and diphthongs in the following words. $(10 \times 1 = 10)$

   Right ; talk ; gun ; send ; train ; call ; belt ; art ; pen ; near.

6. Transcribe the following words : $(10 \times 1 = 10)$

   Book ; name ; bus ; leap ; mug ; ten ; water ; land ; teach ; jet.

7. Write short essays on TWO of the following. $(2 \times 5 = 10)$

   (a) Explain speaking skills.

   (b) Law of trial and error.

   (c) Law of Maturation.

   (d) Mother tongue's impact on acquiring a new language.

---

Register No. [ ]

**TA1B**

5878–23

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

First Year – First Semester

## JURISPRUDENCE

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

### PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Jurisprudence is the philosophy of positive Law". Explain the scope of jurisprudence.

   "இயல்நிலைச் சட்டத்தின் தத்துவமே சட்டவியல்". சட்டவியலின் நோக்கெல்லையை விரிவாக எழுதுக.

2. Elucidate Kelsen's pure theory of Law.

   கெல்சனின் தூய சட்ட கருத்தியலினைத் திறனாய்வு செய்க.

3. Trace the origin of custom.

   வழக்காறு எவ்விதம் உருவானது என்பதைக் கூறுக.

### PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define "Ownership". Discuss the elements of ownership.

   "சொத்துரிமை" என்பதை வரையறு. சொத்துரிமையின் கூறுகளைப் பற்றி விவாதிக்கவும்.

5. Describe the sociological school of jurisprudence.

   சட்டவியல் சமூகவியல் பயில்நெறியம் பற்றி விவரிக்க.

6. Define Legal Person. What is the legal status of unborn child?

   "சட்ட நபர்" வரையறு. கரு நிலையரின் சட்ட நிலை யாது?

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக .

   (a) Jura in re aliena

   ஜுரா இன் ரீ ஏலைனா

   (b) Title

   உரிமை மூலம்

   (c) Stare decisis

   ஸ்டேர் டெஸிஸிஸ்

   (d) Obligation

   கடப்பாடு

   (e) Sovereignty

   இறையாண்மை

   (f) Constitutional Law

   அரசமைப்புச் சட்டம்

   (g) Private Law

   தனிச் சட்டம்

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided case. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' promised 'B' to marry her in the month of July. But 'A' married 'C' in the month of May. Did 'A' have any obligation towards 'B'?

   'A' என்பவர் ஜுலை மாதம் 'B' யை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்தார். ஆனால் 'A' மே மாதத்தில் 'C' யை திருமணம் செய்து கொண்டார். இங்கு 'B' -யிற்காக 'A' ஏதேனும் கடமைப்பட்டுள்ளாரா?

9. A' cupboard was delivered to a carpenter for repair. There was same money in the secret drawer of the cupboard. The carpenter found the money and kept it with him and decided to set off it with the repair cost. Did the carpenter have illegal possession of money?

   ஒரு அடுக்குப்பெட்டியானது மரத்தச்சரிடம் செப்பனிடக் கொடுக்கப்பட்டது. அதன் ரகசிய அறையில் பணம் வைக்கப்பட்டு இருந்தது. மரத்தச்சர் அந்த பணத்தை கண்டெடுத்து செப்பனிடும் கூலிக்கு ஈடாக சரிக்கட்டலாம் என்று தன்னிடம் வைத்துக் கொண்டார். அந்த மரத்தச்சர் சட்டத்திற்கு எதிராக அப்பணத்தை வைத்திருப்பதாக கருத இயலுமா?

10. 'A' found a bundle of (500 Rs/-) five hundred rupees on the floor of a shop. The bundle had been accidentally dropped there by a stranger. The shopkeeper could not find the person who lost it. To whom the ownership of money lies?

கடையின் தரையில் 'A' (500 ரூபாய்/-) ஐநூறு ரூபாய் பணக்கட்டை கண்டுபிடித்தார். ஒரு அந்நியன் தற்செயலாக அக்கட்டை கீழே போட்டுவிட்டார். பணக்கட்டை தொலைத்தவரை கடை உரிமையாளரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்பணத்தின் மீதான உரிமை யாருக்கு இருக்கிறது?

---

Register No. | | | | | | | | |

**TA1C** 5852–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

First Year – First Semester

LAW OF CONTRACTS – I

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the contractual capacity of minor with relevant case laws.

இளவர் ஒப்பந்தத் திறனை பற்றி உரிய வழக்குகளுடன் விவாதிக்க.

2. Discuss about void agreements.

செல்லத்தகா உடன்படிக்கைகளைப் பற்றி விவாதிக்கவும்.

3. Explain about the essential elements of Valid Contracts.

ஒரு செல்லத்தக்க ஒப்பந்தத்தின் முக்கிய காரணிகள் பற்றி விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain about fraud under the Indian Contract Act.

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் வரும் "மோசடி" பற்றி கூறுக.

5. Discuss 'breach of contract' with decided cases.

'ஒப்பந்த மீறுகையை' தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விவாதிக்க.

6. Explain about Sec. 30 of the Indian Contract Act.

இந்திய ஒப்பந்தச் சட்டப் பிரிவு 30-ஐ பற்றி விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Revocation of acceptance

ஏற்பை மறுதலித்தல்

(b) Express and Implied Contracts

நேர்முக மற்றும் மறைமுக ஒப்பந்தங்கள்

(c) Rule in Pinnel's Case

ஃபினல்ஸ் விதி

(d) Conditions of Contracts

ஒப்பந்தங்களின் நிபந்தனைகள்

(e) Injunctions

உறுத்துக் கட்டளை

(f) Doctrine of Frustration

நிலைகுலைவு கோட்பாடு

(g) Quasi Contracts

ஒப்பந்தப் போல்வுகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "A" got the ticket for a film. Due to unavoidable circumstances "A" is unable to go to that film. So "A" decides to sell it to "B". "B" also accepts it. Whether it is a Contract?

"அ" என்பவர் ஒரு படத்திற்காக நுழைவுச் சீட்டை பெறுகிறார். ஆனால் சில காரணங்களால் அப்படத்திற்கு செல்லவில்லை. "அ" என்பவர் "ஆ" என்பவருக்கு சீட்டை விற்கிறார். "ஆ" அதை ஏற்றுக் கொள்கிறார். இது ஒப்பந்தமாகுமா?

9. "A" rented a house for the preparation of arms, ammunition and weapons. The owner of the house is not aware about it. But police arrested both of them. Decide.

ஒருவர் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் தயாரிக்க வேண்டி ஒரு வீட்டை வாடகைக்கு பெறுகிறார். வீட்டு முதலாளிக்கு இது தெரியாது. காவல் துறையினர் ஆயுதம் தயாரிப்பவரையும், வீட்டு முதலாளியையும் கைது செய்கின்றனர். தீர்வு செய்க.

10. Menaka was watching the shopping channel in television and through telephone ordered 10 sarees worth Rs. 2,000. After sometime she cancels it. Whether cancellation is valid?

மேனகா என்பவர் தொலைக்காட்சியில் ஷாப்பிங் அலைவரிசையினை பார்த்துவிட்டு, 10 புடவைகள் ரூ. 2000/-க்கு வாங்க எண்ணி தொலைபேசி வாயிலாக தனது தேவையை பதிவு செய்கிறார். சிறிது நேரத்தில் வேண்டாம் என எண்ணி இரத்து செய்கிறார். இரத்து செய்தது செல்லுமா?

---

Register No. | | | | | | | | |

**TA1D**

5883–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

First Year – First Semester

## LAW OF TORTS

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Describe the general defences that are applicable to all torts.

   அனைத்துத் தீங்கிற்கும் பொருந்தும் பொதுவான எதிர்வாதங்களை பற்றி விவரிக்கவும்.

2. Discuss about the concept of contributory negligence with decided cases.

   தற்பால் கவனமின்மை என்னும் கருத்தியலை பற்றி தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விவாதிக்கவும்.

3. "Motive is irrelevant in law of tort" – Discuss.

   "தீங்கியல் சட்டத்தில் நோக்கம் என்பது தொடர்பற்றது" – விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the circumstances under which an employer can be made liable for the wrongs of independent contractor?

   தற்சார்பான ஒப்பந்ததாரரின் தவறான செயல்களுக்கு பணியாண்மையர் எத்தகைய சூழலில் பொறுப்பாக முடியும்?

5. Discuss the liability of the owner of animals for the damages caused by them.

   விலங்குகள் இழைத்த ஊறுகளுக்கு அதன் உரிமையாளரின் பொறுப்பு நிலையினை பற்றி விவாதிக்கவும்.

6. Discuss in detail about foreign tort with decided cases.

   அயலக தீங்கினை பற்றி தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விவாதிக்கவும்.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Passing off

வணிகப் போலி

(b) Conspiracy

சதி

(c) Conversion

கையாடல்

(d) Assault

தாக்கமுனைதல்

(e) Doubtful torts

ஐயத் தீங்கு

(f) Liquidated damages

அறுதியிடப்பட்ட தீங்கிடு

(g) Hollywood Silver Fox Farm vs Emmette (1936) 2 KB 468

ஹாலிவுட் சில்வர் ஃபாக்ஸ் ஃபார்ம் - எதிர் - எம்மெட் (1936) 2 KB 468

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' plucked some gooseberries from the branch hanging over his house. But, the tree belonged to 'B'. Has 'A' committed any tort?

'A' என்பவர் தனது வீட்டில் தொங்கியிருந்த கிளையிலிருந்து நெல்லிக்காய்களை பறிக்கிறார். ஆனால் அந்த மரம் 'B' என்பவருக்கு சொந்தமானது. 'A' ஏதேனும் தீங்கிழைத்துள்ளாரா?

9. A circus monkey escaped and injured a child. Discuss the liability of the circus management.

ஓர் சர்கஸ் குரங்கானது தப்பித்து ஓர் குழந்தையினை காயப்படுத்துகிறது. சர்கஸ் நிறுவனத்தின் பொறுப்பினை ஆராய்க.

10. 'X' made a statement that 'Y' is suffering from AIDS. Does 'X' committed any tort?

'X' என்பவர் 'Y' என்பவர் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று கூறுகிறார். 'X' ஏதேனும் தீங்கு புரிந்துள்ளாரா?

Register No. [ | | | | | | | ]

**TA1E** **5853–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

First Year – First Semester

FAMILY LAW – I

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Who is a guardian? Explain the kinds and powers of the guardians under the Hindu Minority and Guardianship Act?

   காப்பாளர் என்பவர் யார்? இந்து இளவர் மற்றும் காப்பாளர் நிலைச் சட்டத்தின் கீழ் காப்பாளர்களின் வகைகள் மற்றும் அவர்களின் அதிகாரங்களை பற்றி விளக்குக.

2. Explain the various provisions required for a valid Hindu adoption under the Hindu Adoptions and Maintenance Act?

   இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் செல்லும் இந்து தத்தெடுப்புக்குத் தேவையான பல்வேறு வகையங்களைப் பற்றி விளக்குக.

3. What is Talaq? Explain the various modes of Talaq and its effect?

   தலாக் என்றால் என்ன? பல்வேறு தலாக் முறைகளையும் அதன் விளைவுகளையும் பற்றி விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the procedures for solemnizing a special marriage.

   ஒரு சிறப்பு திருமணத்தை நடத்துவதற்கான நடைமுறைகளை பற்றி விளக்குக.

5. What are the grounds of divorce available to a husband against his wife under the Divorce Act 1869?

   மணமுறிவுச் சட்டம் 1869ன் கீழ் மனைவிக்கு எதிராக கணவன் மணமுறிவு செய்வதற்கான காரணங்கள் என்ன?

6. Explain the procedure followed in a marriage solemnised by a Marriage Registrar appointed under the Indian Christian Marriage Act 1872?

இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம் 1872ன் கீழ் நியமிக்கப்பட்ட திருமணப் பதிவாளரால் நிச்சயிக்கப்படும் திருமணத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Dependants

சார்ந்திருப்பவர்கள்

(b) Acknowledgement of Paternity

தந்தைநிலை ஒப்புதல்

(c) Judicial Separation

நீதிமுறை பிரிவு

(d) Jabar

ஜாபர்

(e) Restitution of Conjugal Rights

திருமண உறவு உரிமைகளை மீட்டு அளித்தல்

(f) Doctrine of factum valet

செய்துவிட்டால் செல்லுமாம் கோட்பாடு

(g) Sources of Hindu law.

இந்து சட்டத்தின் மூலங்கள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "X" a Hindu wife left her husband "Y" at the beginning of 2nd year of marriage. After 4 years, she visited her husband's house during his absence but left before his arrival. "Y" sued for divorce on the ground of desertion by "X". Whether desertion has made out in this case? Decide.

திருமணமான இரண்டாம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து "X" என்ற இந்து மனைவி தனது கணவன் "Y"யை விட்டு பிரிந்து வாழ்ந்து வந்தார். நான்கு வருடம் கழித்து "X" தனது கணவன் "Y" வீட்டிற்கு கணவன் "Y" இல்லாத போது வந்தும் "Y" வீட்டிற்கு வருவதற்கு முன்னர் "X" சென்று விடுகிறார். "X" தன்னை கைவிட்டுவிட்டார் என்று "Y" மணமுறிவு வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில் கைத்துறப்புக்கான காரணம் ஏற்பட்டுள்ளதா? தீர்வு காண்க.

9. "P" a Hindu member of a joint family, marries "Q", a Hindu woman according to the provisions of the Special Marriage Act. On the death of "P" the widow "Q" Claims P's share of joint family property. Decide.

கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த இந்து உறுப்பினரான "P", சிறப்பு திருமணச் சட்டத்தின்படி, இந்து பெண்ணான "Q"வை மணக்கிறார். "P" இறந்தவுடன், விதவையான "Q" கூட்டுக் குடும்பச் சொத்தில் "P"யின் பங்கைக் கோருகிறார். முடிவு செய்க.

10. "A", a Hindu male and "B" a Christian female solemnized Self Respect marriage by tying of Thali and putting of wedding ring in front of their friends. Decide the validity of this marriage?

"A" என்னும் இந்து ஆண் மற்றும் "B" என்னும் ஒரு கிருஸ்துவ பெண், தங்கள் நண்பர்கள் முன்னிலையில் தாலி கட்டியும், திருமண மோதிரத்தை மாற்றியும் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டனர். இந்தத் திருமணத்தின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

Register No. | | | | | | | | |

**TA1F**

**5854–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

First Year – First Semester

LAW OF CRIMES

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the mental elements of crime and its admissibility with decided case laws.

   தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் குற்றத்தின் மனக்கூறுகளையும் அதை ஏற்றுக் கொள்ளும் தன்மையையும் விளக்குக.

2. Explain the offence of kidnapping and make difference between kidnapping and abduction.

   ஆட்கடத்தலினை விளக்கி, அதனுடன் ஆட்கவர்தல் குற்றத்தினை வேறுபடுத்துக.

3. Define 'Bigamy'. Explain the essentials and exceptions of 'bigamy' with decided case Laws.

   'இருதார மணம்' என்பதனை வரையறை செய்க. தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் இருதார மணத்தின் முக்கியக் கூறுகள் மற்றும் விதி விலக்குகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is solitary confinement and what are the limitations provided under the Indian Penal Code for sending a person to solitary confinement.

   தனிமைச் சிறை என்றால் என்ன? மேலும் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் ஒருவரை தனிமைச் சிறைக்கு அனுப்ப வகுத்துள்ள வரைமுறைகள் யாவை?

5. Define Riot and distinguish it with Affray.

கலகம் என்பதனை வரையறை செய்து மேலும் இதனுடன் சச்சரவுக் குற்றத்தினை வேறுபடுத்துக.

6. Explain the law relating to bribery.

இலஞ்சம் தொடர்பான சட்டத்தினை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Culpable homicide

மரணம் விளைவிக்கும் குற்றம்

(b) Adulteration of food

உணவுக் கலப்படம்

(c) Criminal Force

குற்றமுறு வன்முறை

(d) Dacoity with murder

கூட்டுக் கொள்ளையுடன் கொலை

(e) Criminal trespass

அத்துமீறுதல் குற்றம்

(f) Sedition

தேசத் துரோகம்

(g) Inchoate crime

முடிவுராநிலை குற்றம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' instigates 'B' to murder 'D', 'B' in pursuance of the instigation stabs 'D'. 'D' recovers from the wound. Here decide the liability of 'A'.

'D' என்பவரைக் கொலை செய்யும்படி 'B' என்பவரை 'A' என்பவர் தூண்டுகிறார். அத்தூண்டுதலைத் தொடர்ந்து 'B', 'D' யைக் கத்தியால் குத்துகிறார். அந்தக் காயத்திலிருந்து 'D' குணமடைகிறார். இங்கு 'A'-யின் பொறுப்பு நிலையைத் தீர்மானிக்க.

9. 'A', being legally bound to appear before a District Judge, as a witness in obedience to a summons issued by that District Judge, intentionally omits to appear. Here whether 'A' has committed any offence under the Indian Penal Code?

ஒரு மாவட்ட நீதிபதி பிறப்பித்த ஓர் அழைப்பாணைக்குக் கீழ்ப்படிந்து அந்த மாவட்ட நீதிபதி முன்பு ஒரு சாட்சியாக முன்னிலையாவதற்குச் சட்டப்படி கட்டுப்பட்ட 'A' என்பவர் வேண்டுமென்றே முன்னிலையாகமல் இருக்கிறார். இங்கு 'A' ஆனவர் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

10. A, obstructs a path along which Z has a right to pass. A not believing in good faith that he has a right to stop the path. Z is thereby prevented from passing. What is the offence committed by 'A'?

பாதையைத் தடை செய்வதற்குத் தமக்கு ஓர் உரிமை உண்டு என்ற நல்லெண்ணத்தோடு நம்பாத A என்பவர் Z என்பவர் செல்வதற்கு உரிமையுடைய ஒரு பாதையில் தடை ஏற்படுத்துகிறார். இங்கு 'A' செய்த குற்றம் என்ன?

---